‘திராவிட மாடல்’ அரசுக்கு என்றும் உறுதுணையாக இருப்பவர் அய்யா நல்லகண்ணு ! – 2026 தேர்தலில்

# தி.மு.க. கூட்டணி 200 இடங்களுக்கும் மேல் வெற்றி பெறுவது உறுதி!

## தகைசால் தமிழர் அய்யா நல்லகண்ணுவின் 100–வது பிறந்தநாள் விழாவில் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, டிச. 28 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.12.2024) சென்னை, தியாகராயர் நகர், பாலன் இல்லத்தில் அமைந்துள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற விடுதலைப் போராட்ட வீரர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் தோழர் இரா.நல்லகண்ணு அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-**

அய்யா நல்லகண்ணு அவர்களின் நூற்றாண்டு விழா இன்று தொடங்குகிறது. இந்த ஆண்டு முழுவதும் அவருடைய பிறந்தநாளைக் கொண்டாட வேண்டும் என்று, அவருக்காக பல்வேறு நிகழ்ச்சிகளெல்லாம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. வருகின்ற 29ஆம் தேதி மதிப்பிற்குரிய பழ.நெடுமாறன் அவர்களின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு, சென்னை, கலைவாணர் அரங்கத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கக்கூடிய வகையில் காலையிலிருந்து மாலை வரையில் அந்த நிகழ்ச்சியும் சிறப்பாக நடைபெற இருக்கிறது.

**பொதுவுடமை இயக்கத்திற்கும் அய்யா நல்லகண்ணுவுக்கும் நூற்றாண்டு!**

இன்று அந்த விழாவின் தொடக்கமாக நம்முடைய அய்யா நல்லகண்ணு அவர்களை வாழ்த்தக்கூடிய வகையில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அலுவலகத்தில் இன்றைக்கு நாமெல்லாம் ஒன்று சேர்ந்து வாழ்த்திக் கொண்டிருக்கின்றோம். ஒவ்வொரு ஆண்டும் அவருடைய பிறந்தநாளைக்கு இதே இடத்தில் நாம் கூடி வாழ்த்துவது உண்டு. அந்த அடிப்படையில், இன்றைக்கு கூடியிருக்கின்றோம் என்று சொன்னால், இது அவர் காணக்கூடிய நூற்றாண்டு பிறந்தநாள் விழா.

நம்முடைய மதிப்பிற்குரிய முத்தரசன் அவர்கள் சொன்னதுபோல், பொதுவுடைமை இயக்கத்திற்கும் நூற்றாண்டு, அய்யா நல்லகண்ணு அவர்களுக்கும் நூற்றாண்டு. நம்மைப் பொறுத்தவரையில் இப்படி ஒரு பொருத்தம் யாருக்கும் கிடைத்ததில்லை.

அப்படிப்பட்ட பெரும் வாய்ப்பையும், சிறப்பான வாய்ப்பையும், அரிய வாய்ப்பையும் பெற்றிருக்கக்கூடிய நம்முடைய நல்லகண்ணு அவர்களை நானும் உங்களோடு சேர்ந்து வாழ்த்துவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். உள்ளபடியே சொல்ல வேண்டும் என்றால், நான் வாழ்த்த வரவில்லை. வாழ்த்தைப் பெற வந்திருக்கிறேன். இது தான் உண்மை.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.12.2024) சென்னை, தியாகராயர்நகர், பாலன் இல்லத்தில் அமைந்துள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற விடுதலைப் போராட்ட வீரர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் தோழர் இரா.நல்லகண்ணு அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவில், சிறப்புரையாற்றினார்.

**எதையும் ஆழமாக சிந்தித்துச் செயல்படுபவர் அய்யா நல்லகண்ணு!**

எல்லோருக்கும் எல்லாம் - சமூக நீதி, சமத்துவத்தை நிலைநாட்டிட வேண்டும் என்ற உணர்வோடு, இன்றைக்கு தமிழகத்தில் உங்கள் அன்போடும், ஆதரவோடும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் திராவிட மாடல் ஆட்சி நிறைவேற்றிக் கொண்டிருக்கக்கூடிய திட்டங்களுக்கெல்லாம், உறுதுணையாக பக்கபலமாக விளங்கிக்கொண்டிருக்கக்கூடியவர் நம்முடைய அய்யா நல்லகண்ணு அவர்கள்.

அய்யா நல்லகண்ணு அவர்கள் அமைதியாக, அடக்கமாக அதே நேரத்தில் ஆழமாக எதையும் சிந்தித்து வெளிப்படுத்தக்கூடியவர். அப்படிப்பட்ட அய்யா நல்லகண்ணு அவர்களை உங்களோடு சேர்ந்து வாழ்த்துவதில் நான் பெருமைப்படுகிறேன்.

தொடர்ந்து நீங்கள் இருந்து எங்களைப் போன்ற இளைஞர்களுக்கு வழிகாட்டிட வேண்டும், துணை நிற்கவேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் இன்றைக்கு தமிழகத்தில் அமைந்திருக்கக்கூடிய மதச் சார்பற்ற கூட்டணி அமைப்பினுடைய தலைவர்கள் சார்பில் நான் அன்போடு அவரை கேட்டுக் கொண்டு நமது முத்தரசன் அவர்கள் பேசுகின்றபோது சொன்னார்; நான் செயற்குழுவில் பேசிய அந்தப் பேச்சை கோடிட்டுக் காட்டி 200 இடங்களுக்கு மேல் வெற்றி பெறுவோம் என்று நான் சொன்னதாக எடுத்துச் சொன்னார். ஆனால், இன்றைக்கு இருக்கக்கூடிய நிலை என்ன என்று கேட்டால், 200 அல்ல, 200யும் தாண்டி வெற்றி பெறும் வகையில் நம்முடைய கூட்டணி அமைந்திருக்கிறது.

7 ஆண்டு காலமாக இந்தக் கூட்டணி தொடர்ந்து வருகிறது. தேர்தல் களத்தில் நின்று தொடர்ந்து வெற்றியைப் பெற்று வருகிறோம். ஆகவே, இந்தக் கூட்டணியைப் பொறுத்த வரைக்கும், கொள்கைக் கூட்டணி மட்டுமல்ல, இது நிரந்தரக் கூட்டணி என்பதை இந்த நேரத்தில் அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொல்லி, அதற்கு நீங்கள் எல்லாம் துணை நிற்கவேண்டும் என்று அன்போடு கேட்டு உங்கள் அனைவரின் சார்பிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், அய்யா நல்லகண்ணு அவர்கள் வாழ்ந்து நமக்கு வழிகாட்டிட வேண்டும் என்று கேட்டு, வாழ்க! வாழ்க! வாழ்க! என்று வாழ்த்துகிறேன்.

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

**அய்யா நல்லகண்ணு நமக்கு தொடர்ந்து வழிகாட்ட வேண்டுகிறேன்!**

**7 ஆண்டு காலமாக இந்தக் கூட்டணி தொடர்ந்து வருகிறது. தேர்தல் களத்தில் நின்று தொடர்ந்து வெற்றியைப் பெற்று வருகிறோம். ஆகவே, இந்தக் கூட்டணி யைப் பொறுத்தவரைக்கும், கொள்கைக் கூட்டணி மட்டுமல்ல, இது நிரந்தரக் கூட்டணி என்பதை இந்த நேரத்தில் அழுத்தந்திருத்தமாக எடுத்துச் சொல்லி, அதற்கு நீங்கள் எல்லாம் துணை நிற்கவேண்டும் என்று அன்போடு கேட்டு, உங்கள் அனைவரின் சார்பிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், அய்யா நல்லக்கண்ணு அவர்கள் வாழ்ந்து நமக்கு வழிகாட்டிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.**

---

திருவைகுண்டம் அரசு மருத்துவமனையைத் தரம் உயர்த்தி

# ‘தோழர் நல்லகண்ணு நூற்றாண்டுக் கட்டடம்’ எனப் பெயர் சூட்டல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, டிச. 28-**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் தலைவர் தோழர் இரா.நல்லகண்ணு அய்யா அவர்களின் 100வது பிறந்த நாளை முன்னிட்டு, திருவைகுண்டம் அரசு மருத்துவ மனையைத் தரம் உயர்த்தி, அன்னாரின் பெயரைச் சூட்டிட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.**

தமிழ்நாட்டின் முதுபெரும் பொதுவுடைமைச் சிந்தனையாளரும், விடுதலைப் போராட்ட வீரரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் தலைவருமான தோழர் இரா.நல்லகண்ணு அய்யா அவர்களின் 100வது பிறந்த நாள் நேற்று முன்தினம் (26.12.2024) கொண்டாடப்பட்டது.

நமது மாநிலத்திற்கும், தமிழ் மக்களுக்கும் அன்னார் அவர்கள் ஆற்றிய சிறப்பான தொண்டுகளைப் போற்றும் விதமாக, தமிழ்நாடு அரசு 2022ஆம் ஆண்டு ‘தகைசால் தமிழர்’ விருது வழங்கிச் சிறப்பித்தது. நேற்று முன்தினம் (26.12.2024) அவரது நூறாவது பிறந்த நாள் விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று வாழ்த்தியபோது, அவர் விடுத்த கோரிக்கையை ஏற்று, அவர் பிறந்த திருவைகுண்டம் அரசு மருத்துவமனையை சி.டி. ஸ்கேன் வசதியுடன் தரம் உயர்த்தி, கூடுதல் வசதிகளுடன் புதிய மருத்துவமனைக் கட்டடம் அமைத்திட உத்தரவிட்டுள்ளார்கள்.

கடந்த 85 ஆண்டுகளுக்கும் மேலாக மக்கள் பணியையே எப்போதும் தனது தலையாயக் கடமையாகக் கொண்டு செயல்பட்டு வரும் தன்னலமற்ற தகைசால் தமிழர் தோழர் இரா.நல்லகண்ணு அய்யா அவர்களின் பெருமையைப் போற்றும் வகையில், திருவைகுண்டத்தில் அமைய விருக்கும் புதிய மருத்துவமனைக் கட்டடத்திற்கு “தோழர் நல்லகண்ணு நூற்றாண்டுக் கட்டடம்” எனப் பெயரிடவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

---

அமிர்த.விஜயகுமார் ஏற்பாடு! எம்.அப்துல்மாலிக், எஸ்.கே.முத்துராஜா பங்கேற்பு!

# செம்பனார்கோயில் மத்திய ஒன்றியத்தில் அ.தி.மு.க.வினர் கழகத்தில் இணைந்தனர்!

## மாவட்டச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. முன்னிலையில்!

*மயிலாடுதுறை, டிச.28 -*

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் மத்திய ஒன்றியத்தில் இருந்து அ.தி.மு.க., பா.ம.க. உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த 150 பேர் அக்கட்சிகளில் இருந்து விலகி தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சி பொறையாற்றில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செம்பனார்கோயில் மத்திய ஒன்றியக் கழகச் செயலாளர் அமிர்த. விஜயகுமார் தலைமை தாங்கினார்.

செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியச் செயலாளர் எம்.அப்துல்மாலிக் முன்னிலை வகித்தார்.

ஒன்றியக் குழு துணைத் தலைவர் பாஸ்கரன் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் பெருமாள் நல்லூர் ஊராட்சி, திருக்கடையூர் ஊராட்சிகளில் இருந்து அ.தி.மு.க., பா.ம.க. கட்சிகளில் இருந்து செட்டிமேடு, பிள்ளைபெருமாள் பகுதியைச் சேர்ந்த அ.தி.மு.க. ஒன்றிய மாணவர் அணி செயலாளர் தமிழரசன், முன்னாள் கிளை செயலாளர் சுரேஷ்கண்ணன், 150 பேர் அக்கட்சிகளில் இருந்து விலகி மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

கழகத்தில் இணைந்தவர்களுக்கு இரு வண்ண கைத்தறி ஆடை அணிவிக்கப்பட்டு கழகத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சியில் தரங்கம்பாடி பேரூர்ச் செயலாளர் எஸ்.கே.முத்துராஜா, தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுணாசங்கரி குமரவேல், துணைத் தலைவர் பொன்.ராஜேந்திரன், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் வைத்தியநாதன், மாவட்டத் தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் திருக்கடையூர் இரா.செந்தில், ஒன்றிய மகளிர் அணி அமைப்பாளர் அனிதாஸ்டாலின், ஊராட்சி மன்ற தலைவர் தீபாமுனுசாமி, ஒன்றிய மீனவர் அணி அமைப்பாளர் சங்கர், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் மாரியப்பன் மற்றும் ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவினை முன்னிட்டு, எடமேலையூர் அரசு மேல் நிலைப்பள்ளியில் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு நடைபெற்றது. மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் மீனாட்சி சூரியபிரகாஷ் தலைமையில், ஒன்றியச் செயலாளர் நா.கவியரசு, மாவட்ட துணைத் தலைவர் மலர்மன்னன், ஒன்றிய அமைப்பாளர் கோவிந்தராஜ், மு.விவசாய அணி அமைப்பாளர் சிவ. இராமமூர்த்தி மற்றும் ஆசிரியப் பெருமக்களும், மாணவர்களும் கலந்து கொண்டு மரக்கன்றுகள் நடவு செய்தனர்.

---

# போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை பெற புதிய கல்லூரி மாணவர்கள் இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்!

## ஜன.31 கடைசி நாள் என அரசு அறிவிப்பு!

*சென்னை, டிச. 28 -*

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ ஆதிதிராவிடர் மாணாக்கர்களின் கல்வி மேம்பாட்டிற்காக போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம், ப்ரிமெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம், சுகாதாரமற்ற தொழில் புரிவோர்களின் குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகை திட்டம் (சாதி மற்றும் வருமான வரம்பு ஏதுமின்றி) உள்ளிட்ட பல கல்வி உதவித் தொகை திட்டங்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் வருடந்தோறும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

2024-2025ஆம் கல்வியாண்டிற்கு கல்லூரிகளுக்கான கல்வி உதவித் தொகை திட்டங்களுக்கான இணையதளம் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இதில் ஏற்கனவே கல்லூரியில் சேர்க்கை பெற்று பயின்று வரும் புதுப்பித்தல் (Renewal) மாணாக்கர்கள் கல்வி உதவித் தொகைக்கு புதிதாக விண்ணப்பிக்க வேண்டிய அவசியமில்லை. புதுப்பித் தல் மாணாக்கர்கள் கல்லூரிகளில் பயில்வதை சம்மந்தப்பட்ட கல்லூரிகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டு கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

2024-2025ஆம் கல்வியாண்டில் கல்லூரியில் முதலாமாண்டு சேர்க்கை பெற்ற மாணாக்கர்கள் மற்றும் சென்ற வருடத்தில் கல்வி உதவித் தொகைக்கு விண்ணப்பிக்க தவறிய மாணாக்கர்கள் தற்போது தாங்கள் பயிலும் கல்லூரியில் கல்வி உதவித் தொகைக்கென உள்ள ஒருங்கிணைப்பு அலுவலரை (Nodal Officer) அணுகி UMIS (https://umis.tn.gov.in/ ) என்ற இணையதளத்தில் கல்லூரி மூலம் கல்வி உதவித் தொகைக்கு விண்ணப்பிக்கலாம்.

போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்க விரும்பும் புதிய கல்லூரி மாணாக்கர்கள் கீழ் காணும் ஆவணங்களைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

1. வருமானச் சான்றிதழ் (பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்குள் இருக்க வேண்டும்).

2. சாதிச் சான்றிதழ் (வருமானச் சான்று மற்றும் சாதிச் சான்று ஆகியவை இணைய சான்றுகளாக இருத்தல் அவசியம். இணைய சான்றுகளை பெற அருகிலுள்ள இ-சேவை மையங்களில் விண்ணப்பிக்க வேண்டும்).

3. மாணாக்கரின் ஆதார் எண்ணுடன் மாணாக்கர்களின் வங்கிக் கணக்கு எண் இணைக்கப்பட்டிருக்க (seeding) வேண்டும். அவ்வங்கிக் கணக்கு செயல்பாட்டில் (Active) உள்ள கணக்காக இருக்க வேண்டும். இவ்விவரங்களை மாணாக்கர்களுக்கு தெரிவித்து ஆதிதிராவிடர், கிறித்துவ ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கர்களின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்குமாறு கல்லூரி முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கல்வி உதவித் தொகை தொடர்பான சந்தேகங்களுக்கு கட்டணமில்லா சேவை எண் 18005997638 அலுவலக நேரங்களில் தொடர்பு கொள்ளலாம்.

விண்ணப்பம் சமர்ப்பிக்க கடைசி நாள் 31.01.2025.